# பாரதிய ஜனதா கட்சி

**(மத்திய அலுவலகம்)**

11, அசோக் ரோடு, புது தில்லி   110001

தொலைபேசி. எண்: 23005700; பேக்ஸ்: 23005787


<u>பா.ஜ.க. தேசிய பத்திரிகை தொடர்பாளர் ஸ்ரீ பிரகாஷ் ஜாவேத்கர் எம்.பி. ஜனவரி 17, 2013 அன்று வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை</u>

நாட்டின் சாதாரண குடிமக்கள் அனைவரும் தொடர்ந்து உயர்ந்துவரும் விலைவாசியினால் ஏற்படும் அழுத்தத்தின் காரணமாக தத்தளித்து வருகின்றனர். அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி மக்களுக்கு இதில் ? ?? வேண்டும். ஆனால், அதற்கு பதிலாக ரயில் முதல் எண்ணெய் வரை அனைத்தையும் விலையேற்றி, மேலும் புதிய சுமைகளை சுமக்க வைக்கிறது. *?.எம்.சி. க்களை அவ்வப்போது தங்கள் விலையை மறு ஆய்வு செய்வதற்கு அனுமதிக்கிறோம் என்ற போர்வையில், அரசு டீசல் விலையை உயர்த்த முடிவு செய்துள்ளது. இதை பா.? .?. கடுமையாக எதிர்க்கிறது.* இது அரசு தனது கடமைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கான முனைப்புதான். அரசாங்கம் ஏற்கெனவே டீசல் விலைகளை இன்னும் சில நாட்களுக்குள் லிட்டருக்கு ரூ.10 உயர்த்த முடிவு செய்துவிட்டது என்று பா.? .?. குற்றம் சாட்டுகிறது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அறிக்கையிலும், ஜனாதிபதியின் உரையிலும் உறுதி அளிக்கப்பட்ட ஹைட்ரோகார்பன் விலைக் கொள்கையை (ஹெச்.பி.பி.) இன்னமும் வெளியிடவில்லை. கொள்கையிலோ முடிவெடுத்தல்களிலோ எந்த விதமான நிலைத்தன்மையையும் இந்த அரசு பின்பற்றுவதில்லை. பெட்ரோலிய அமைச்சர்களை 4 முறைகளும், விலை நிர்ணய முடிவெடுத்தல்களை 15 முறைகளும் மாற்றியுள்ளன. இப்படிப்பட்டத் கொள்கைத் தடுமாற்றங்கள் சீர்படுத்த முடியாத பொருளாதார இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

*டீசல் விலை உயர்வு அமல்படுத்தப்பட்டால், அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்தும் சங்கிலித் தொடர்போல விலை ஏறும். இது அனைத்துவிதமான பயணிகள் போக்குவரத்து செலவு மற்றும் பொருள்களின் விலையும் உயர்வதற்கு வழிகோலும். இது பாசனம், டிராக்டர்கள் மற்றும் பிற விவசாய இடுபொருட்களின் விலைகளையும் அதிகரிக்கச் செய்யும்.*

பெட்ரோலியப் பொருட்களைப் பொருத்தவரை இந்தியாவில் மிக அதிகமாக வரி வசூலிக்கப்படும் ஒரு துறையாக இருந்து வருகிறது. மத்திய அரசு இந்தப் பிரிவில் மட்டும், ரூ.2 லட்சம் கோடி தொகை வரி வசூலிக்கும். வசூலிக்கப்படாத தொகை என்று சொல்லப்படுவது

சந்தேகத்துக்குரியவை மட்டுமல்லாமல், இதன் பெரும் பகுதி உச்தேசமாக சொல்லப்படுபவை. *தாங்கள் செலுத்திவரும் அதிகப்படியான வரிகளுடன் சேர்த்து, சர்வதேச விலைகளை நுகர்வோர் ஏற்க வேண்டும் என்பதோடு, ?.எம்.சி.க்களின் திறனற்ற நடவடிக்கைகளினால் ஏற்படும் நஷ்டத்தையும் நுகர்வோர் தலையிலேயே சுமத்த வேண்டும் என்பது நியாயமற்ற செயல்.*

*சமையல் எரிவாயு எண்ணிக்கை வரம்பை 6லிருந்து 9? ? உயர்த்தும் முடிவே ஒரு நாடகம்தான்.* 60 வருடங்களா? வீட்டு உபயோகத்திற்காக நாட்டு மக்கள் எல்.பி.ஜி. சிலிண்டர்களை எந்த வரையறையும் இல்லாமல் பெற்று வருகிறார்கள். திடீரென்று வருடம் 6 சிலிண்டர்களுக்கு மட்டும்தான் மானிய விலை என்ற உச்ச வரம்பை நிர்ணயித்ததே அக்கிரமமான முடிவு. அதன் பிறகு, இன்னும் 3 சேர்த்து, 9-? ? ? ? ர்த்தியதில் அர்த்தமே இல்லை. எனவே, தனது உச்ச வரம்பு முடிவை திரும்பப் பெற்றுக்கொண்டு, ஏற்கெனவே இருந்தது போலவே அவரவருக்கு வேண்டும் அளவு எல்.பி.ஜி. சிலிண்டர்களை வாங்கிக்கொள்ளலாம் என்ற கொள்கையை அமல்படுத்த வேண்டும்.

**(ஓ.பி. கோஹ்லி)**

தலைமையகப் பொறுப்பாளர்